Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், சார்வரி பங்குனி 19 ஆம் நாள் ஷவ்வால் 14. (1-4-61) சனிக்கிழமை இதழ் 43




# அவசரகாலச்சட்டம்

## எச்சமயமும் அமுலாகலாம்!

## தமிழரசுக்கட்சி தலைவர்கள் மந்திராலோசனை

### இன்று ஐ. ஜி. பி. வருகிறுர்

யாழ்ப்பாணம் சனி

**அவசரகாலச் சட்டம் அல்லது ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டாலும் சத்தியாக்கிரக இயக்கம் கைவிடப்படமாட்டாதென்றே தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எம். டபிள்யூ. எப். அபயகோன் இன்று யாழ்ப்பாணம் வருகிறுர்.

அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டால் அடுக்து என்ன நடவடிக்கை எடுக்கப் படவேண்டுமென்பது பற்றித் தலைவர்கள் ஏற்கனவே முடிவு செய்து வைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் நேற்று மாலை நடைபேற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அவசரகாலச் சட்டம் வந்தால் அடுக்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றியும் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அவசரகாலச் சட்டமோ ஊரடங்குச் சட்டமோ பிறப்பிக்கப்பட்ட போதிலும் சத்தியாக்கிரகம் நடத்த வேண்டுமென்றும் சத்தியாக்கிரகிகள் கைதுசெய்யபபட்டுக குறிப்பிட்ட இடத்தைத் தடுக்கப்பட்ட பிரதேசமாக்கிவிட்டால் இயக்கத்தை ஒத்திவைக்கலாமென்றும் செயற்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டதாம்.

இன்றுள்ள நிலையில் அவசரகாலச் சட்டமும் ஊரடங்குச் சட்டமும் எந்த நேரத்திலும் பிரகடனப்படுத்தபபடக் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னுள் ஊர்காவற்றுறைத் தொகுதி எம். பி. திரு. அல்பிரட் தமபிஐயா நேற்றுமாலை தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தைச் சந்தித்து நீண்ட நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்.

### வசதிக்கட்டணத்தை குறைக்க கோரிக்கை

சங்கானை மார்ச் 30

பாடசாலைப் பிள்ளைகளிடம் அறிவிடப்படும் வசதிக்கட்டணப்பணம் மாதம் 50 சதமாகக் குறைக்கப்பட வேண்டுமெனறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்று சங்கானை பட்டின சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பிரேரணையை தலைவர் திரு. நா. முத்தையா பிரேரித்துப் பேசினுர்.

### அணுக்குண்டை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

லண்டன், மார்ச் 31

அணுக்குண்டைத் தடை செய்யுமாறு கோரி சுமார் 1500 ஆசியர்கள் உட்பட 13,000 க்கு மேற்பட்டோர் இங்கு ஆர்ப்பாட்டம் செய்ய ஏற்பாடு செய்துவருவதாய் அறிவிக்கப்படுகிறது. இந்த ஆர்ப்பாடடத்தில் இலங்கையர், இந்தியர் ஆகியோரும் பங்குபற்றுவர்.

### மந்திரி சபையில் பிரதமர் கூறியது

கொழும்பு, மார்ச் 31

'நான் பதவியை ராஜினுமா செய்தாலும் செய்வேன்." சத்தியாக்கிரகம் நடக்கையில் பேச்சுவார்த்தைகளை நடத்த மாட்டேன்" என்றிவ்வாறு பிரதமர் சிறிமா இன்ற மந்திரி சபைக் கூட்டத்தில் கூறியதாகத் தெரிகிறது.

### கூட்டத்தில் குழப்பம்

யாழ்ப்பாணம், சனி

நேற்று நடைபெற்ற சிகை அலங்கரிப்பாளர் சங்கக் கூட்டம் குழப்பத்தில் முடிந்ததாகத் தெரிகிறது.

பங்கீட்டரிசி பெறுவதுபற்றி நடைபெற்ற விவாதத்தில் அரசாங்கம் விநியோகிக்கும் அரிசியை வாங்குவது சரியென ஒரு சில அங்கத்தவர் கூறியதை ஒருவர் ஆட்சேபித்ததைத் தொடர்ந்தேகூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டதாக அறியப்படுகிறது.

## 'உரிமைப் போராட்டம் தொடர்ந்து நடைபெறும்'

— தலைவர் எஸ். ஜே. வி.

யாழ்ப்பாணம், வெள்ளி

"சுதந்திரத்தோடும் முழு உரிமைகளுடனும் இந்நாட்டில் வாழும்நிலைஏற்படும்வரைக்கும் எமது உரிமைப்போராட்டத்தைச் சிறிதளவும் கைவிடாமல் தொடர்ந்து நடத்தவேண்டும் என்பதே நான் தமிழ்பேசும் மக்களிடமிருந்து கேட்டுக் கொள்ளும் விண்ணப்பம்". இவ்வாறு தலைவர் திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் தமதுபிறந்த தினத்தை முன்னிட்டு 'ஈழநாடு' பத்திரிகைக்கு விடுத்துள்ள சிறப்புச்செய்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணம் வாடிவீட்டில் தங்கி இருக்கும் திரு. செல்வநாயகத்தை நேற்றுமுழுவதும் நண்பர்களும் உறவினர்களும் நேரிலும் தந்திமூலமாகவும் ஆயிரக்கணக்காகத் தமது ஆசியையும் வாழ்த்தையும் தெரிவித்தவண்ணமேயிருந்தனர். பலர் அவருக்கு அன்பளிப்புக்களையும் வழங்கிச் சென்றனர். தமது ஆசியை நேரில்தெரிவிக்க மட்டக்களப்பு முதலிய இடங்களிலிருந்தும் பலர் அன்பளிப்புக்களுடன் வந்திருந்தனர்.

திரு. செல்வநாயகம் மேலும் தமது செய்தியில் கூறியிருப்பதாவது:-

"நாங்கள் கொண்டுநடத்தும் இயக்கத்துக்கு இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்கள் பலவிதத்திலும் பூரண ஆதரவு அளித்து வருகிறுர்கள். ஆர்வத்திலோ செயலிலோ தியாகத்திலோ அவர்கள் குறைவிடவில்லை. இவற்றினுக்கும் மேலாகத் தொண்டர்களும் ஏனைய மக்களும் அஹிம்சை முறையிலிருந்து அணுவளவேனும் தவருமல் நடந்து வருகின்றனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க அதிபருடன் முக்கிய ஆலோசனை

### பிரதமருடன் தொண்டமான் பேச்சு

கொழும்பு, மாச் 31

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அத்தியாவசிய சேவைகளை நடததுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும் இதற்கான முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமெனவும் நேற்று நடைபெற்ற வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அரசாங்க அதிபர்களைக் கொண்ட மகாநாட்டில் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா கேட்டுக்கொண்டார்.

அத்தியாவசிய சேவைகளைச் சரிவர நடத்த விடாமல் இருந்துவரும் முட்டுக்கட்டைகளை எந்த முறையில் நீக்குவது என்பது பற்றி "டெம்பிள் டிரீஸ்" மாளிகையில் பிரதமரின் தலைமையில் ஆலோசனை நடைபெற்றது.

நிலைமையைச் சமாளிக்க முடியாவிட்டால் அரசாங்கம் "வேறு சில நடவடிக்கை"களை எடுக்க வேண்டியிருக்குமென பிரதமர் அரசாங்க அதிபர்களிடம் தெரிவித்தார். ஆனல் "வேறுசில நடவடிக்கை" என்பதற்குப் பிரதமர் விளக்கம் தரவில்லை எனக் கூறப்படுகிறது.

புரதம மந்திரி கூட்டிய இம் மகாநாட்டில் மட்டக்களப்பு, திருக்கோணமலை, யாழ்ப்பாபாணம், மன்னர், வவுனியா ஆகிய 5 அரசாங்க அதிபர்களும் கலந்துகொண்டார்கள்.

பொலிஸ், ராணுவத்தினருடைய லீவுகள் ரத்துச்செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டிய பிரதமர் அத்தியாவசிய சேவைகளை நடத்த அர

(6ம் பக்கம் பார்க்க)

### மீண்டும் குண்டு வீச்சு சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

நேற்றிரவு 11 மணிக்கு பழைய பூங்கா கச்சேரிவாயிலுக்கருகாமையில் ஒரு கைக்குண்டு வீசப்பட்டது. இது கடந்த 3 தினங்களுக்குள் ஏற்பட்ட இரண்டாவது குண்டுவீச்சு சம்பவமாகும்.

குண்டு வீசப்பட்ட இடத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்சரம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், தமிழரசுக் கட்சிப் பொதுக் காரியதரிசி திரு. வி. நவரத்தினம் ஆகியோரும் மற்றும் சிலரும் உட்கார்ந்திருந்தனர். திரு. நவரத்தினமும் எம். பி. க்களும் குண்டு வீச்சிலிருந்து மயிரிழையில் தப்பினர். இணுவில் வாசியான குமாரசாமி என்பவருக்குக் கையில் காயம் ஏற்பட்டது. கோண்டாவிலைச் சேர்ந்த துரைராஜா என்பவருக்குக் காலிலே காயம் ஏற்பட்டது.

சம்பவம் நடந்தபோது ஆயுதம் தரித்த இரு பொலிசார் வாயிலில் காவலுக்குநின்றனர். காயமடைந்த திரு. குமாரசாமி இதுபற்றி பொலிசில் புகார் செய்துள்ளார்.

## மழையிலும் காற்றிலும் சத்தியாக்கிரகம் மேலங்கியில்லாது எம். பி.க்கள் மறியல்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர்க் கந்தசாமி கோவிலிலிருந்து கற்பூரச் சட்டி ஏந்தியபடி 'வெற்றிவேல் வீரவேல்' என்ற உணர்ச்சிக் கோஷத்துடன் எண்பது பெண்கள் நேற்றிரவு கச்சேரியடிக்குச் சென்றனர். சத்தியாக்கிரகம் நடைபெறும் கச்சேரியின் முன்னுலுள்ள வீதியில் சுவாலை விட்டு எரிந்து கொண்டிருந்த கற்பூரச் சட்டிகளை வைத்தனர். வரிசையாக வீதியில் வைக்கப்பட்ட தீச்சட்டிகள் அங்கு ஒரு புதிய பிரகாசத்தையும் பெண்களின் 'வெற்றிவேல் வீரவேல்' என்ற உணர்ச்சிக் கோஷமும் பக்திப் பாடல்களும் கச்சேரியடியில் திரண்டிருந்தவர்களையும் உணர்ச்சி வசப்பட்டு 'வெற்றிவேல், வீரவேல்' என்று கோஷமிடச் செய்தது.

யாழ்பாணத்தில் நேற்றுப் பகலில் நல்ல மழையும் இடை

(6-ம் பக்கம் பார்க்க)

### காங்கோபற்றி தீர்மானம் தயாராகிறது

நியுயோர்க், மார்ச் 31

காங்கோ பற்றிய தீர்மானம் ஒன்றை இந்தியாவும், இலங்கையும் சேர்ந்து தயாரித்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது. காங்கோவிலிருந்து பெல்ஜியர்களை வெளியேற்ற ஒரு காலக்கெடு நிர்ணயிக்க வேண்டுமென்றும், அந்தக்கெடுவிற்குள் அவர்கள் வெளியேருவிட்டால் கட்டாயமாக அவர்களை வெளியேற்றவேண்டுமென்றும் இத்தீர்மானத்தில் கோரப்படுமாம். காங்கோ பார்லிமெண்டைக் கூட்டுவது பற்றி மற்ருேர் தீர்மானத்தையும் இரு நாடுகளும் தயாரித்து வருவதாய்க் கூறப்படுகிறது.

## மணிவாக்கு

"எல்லா நாடுகளிலும், எல்லா மதங்களிலும் உள்ள மக்கள் அனைவருக்கும் பொதுவாக ஒரே ஒரு கடவுள்தான். நாமெல்லாம் அவரது குழந்தைகள். இந்த உறவை ஞாபகத்தில் வைத்தால் ஒருவரை ஒருவர் நாம் அன்புடன் நேசிப்பது சுலபமாகும்".

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் சார்வரி ஆண்டு பங்குனி மீ 19 உ (1-4-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## ஆசிரியர் இடமாற்றம்

பாடசாலைகள் அரசாங்க வசமானபின், ஆசிரியர்களுக்குப் பெரிய கவலையளித்துள்ளது இடமாற்ற விஷயம். அகில இலங்கை ஆசிரியர் சங்கம், சிங்கள ஜாதிக குருசங்கமய, அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கம், இம்மூன்று ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளடங்கிய கூட்டுச்சபை, இது பற்றி அரசாங்கத்துக்குச் செய்திருந்த சிபார்சு பற்றிய அறிக்கை விபரங்களை "ஈழநாடு" இதழ்களில் வெளியிட்டிருந்தோம். அதிலிருந்து இது எவ்வளவு சிக்கலான விஷயமென்பதும், ஆசிரியர்களுக்கு இதில் எவ்வளவு சங்கடங்கள் உள்ளனவென்பதும் ஓரளவு வெளியாயிற்று.

ஆசிரியர் இடமாற்ற விஷயமாக புதியதிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாயும் மே மாதம் முதல் இத்திட்டம் அமுலுக்கு வருமென்றும் கல்வி இலாகாவின் அறிக்கை தெரிவிக்கிறது. புதிய திட்டவிபரங்கள் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் ஏப்ரல் 15-ந் திகதிக்குள் அனுப்பிவைக்கப் பெறுமென்றும், புதிய திட்டப்படியே இனி இடமாற்றத்துக்கான மனுக்கள் செய்யப்படவேண்டுமென்றும், ஆகவே ஆசிரியர்கள் இது பற்றி, எந்த அதிகாரிகளையும் நேரில் காணவோ, அல்லது இலாகாவுக்கு எழுதவோ வேண்டாமென்றும் கேட்டுக் கொள்ளப்படுவதாக அதே அறிக்கை தெரிவிக்கிறது. புதியதிட்டத்தில், ஆசிரியகூட்டு சபையின் யோசனைகள் எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது தெரியவில்லை. என்றாலும், கூட்டுச்சபை கூறியிருந்த யோசனைகளைத் தழுவி இடமாற்றத்திட்டம் இருந்தாலே, அது ஓரளவு சீராக நடைபெற முடியுமாதலால், அவைவெகுவாக ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்குமென்றே நம்புகிறோம்.

ஆனால் புதிய திட்டம் அமுலுக்குவருமுன், சில பாடசாலை ஆசிரியர்களை, அவர்கள் விருப்பத்துக்கு மாறாக இடமாற்றம் செய்துள்ளதாயும், ஒரு பாடசாலையிலிருந்து, எல்லா ஆசிரியர்களும் அப்படியே வேறு ஒரு பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாயும். இதனால் அந்த ஆசிரியர்களுக்கு மட்டுமன்றி சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கும் பெரிய சங்கடம் ஏற்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது, புதிய திட்டம் வருமுன்பாக, கல்வி இலாகா அவர்களை இப்படி மாற்ற வேண்டிய அவசியமோ அவசரமோ என்ன? ஆசிரியர்கள் தாங்களாகப் பரஸ்பர ஏற்பாட்டின்மீது இடமாற்றம் செய்து கொள்ள முன்வந்தாலொழிய, புதிய திட்டம் அமுலுக்கு வரும்வரை, கல்வி இலாகாவும் யாரையும் இடமாற்றம் செய்யாதிருக்கக் கடமைப் பட்டுள்ளது. மீறி இடமாற்றம் செய்வது ஆசிரியர்களிடையே ஆத்திரமும் அதிருப்தியும் அதிகரித்து, மாணவரின் கல்வி போதனையைப் பெரிதும் பாதிப்பதாக இருக்கும்.

ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு சபை இருந்து ஆசிரியர் இடமாற்ற விஷயத்தைத் தீர்மானிக்க வேண்டுமென்று ஆசிரியர் கூட்டுச்சபை சிபார்சு செய்துள்ளது. இந்த யோசனையைக் கல்வி அமைச்சு ஏற்குமாயின், ஆசிரியர் இடமாற்ற சம்பந்தமான சில்லறை விஷயங்களில் காலத்தை வீணாக்காமல்கல்விக்கொள்கை, கைத்தொழில் கல்வி விஸ்தரிப்பு முதலிய அதிக பயனுள்ள விஷயங்களில் அது கவனத்தைத் திருப்பலாம். பிரிட்டனில் அந்தக் கல்வி நிர்வாக அதிகாரம் "கவுண்டி கவுன்ஸில்" எனும் பிரதேச சபையிடமே அதிகமுள்ளது. அதே கொள்கையை இலங்கையிலும் பின்பற்றுவதாயின் இதுபற்றிய பெரிய மண்டையிடிகள் தீரலாம்.

இடமாற்றங்களுக்கு அரசியல் காரணம்தான் முக்கியமாக இருப்பதாயும், பழி தீர்த்துக் கொள்ளவே, அரசியல் வாதிகள், ஆசிரியர்களை இடமாற்றம் செய்யத் தங்கள் செல்வாக்கைத்துஷ்பிரயோகம் செய்வதாயும் கூறப்படுகிறது. பார்லிமெண்ட் மெம்பரோ, அல்லது எந்த அரசியல் வாதிகளோ இவ்விஷயத்தில் தலையிடப் புதிய திட்டத்திலும் இடமிருப்பது நல்லதன்று. இதே சமயம் ஆசிரியர்களும், மாணவர்களுக்குக் கல்வி போதிக்க வேண்டிய முக்கிய விஷயத்தில் தங்கள் பூரண கவனத்தைத் திருப்பி, தேர்தல் முதலிய கட்சி அரசியலில் சம்பந்தப்படாமல் ஒதுங்கி இருப்பதாயின் தங்கள் நன்மையைத் தாங்களே வெகுவாகப் பாதுகாத்துக் கொண்டவராவர்.

# 'தமிழ்மொழிக்குச் சட்ட அங்கீகாரம் வேண்டும்'

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பழைய மொழிக்கொள்கை

சிறீ லங்கா சுதந்திரக்கட்சியின் தாபக உறுப்பினருள் ஒருவராகவும், பல ஆண்டுகளாக அதன் உப தலைவர்களுள் ஒருவராகவும் நான் இருந்திருக்கிறேன். நான் வேறு அரசியற் கட்சி எதிலும் அங்கத்தவராக இருந்ததில்லை.

இக்கட்சியின் தாபகரும் முதல்வருமாகிய காலஞ்சென்ற பிரதம மந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெற்ற சி. ல. சு. கட்சியின் மொழி உப குழு 1955 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பின்வருமாறு தெரிவித்தது:-

"நாட்டின் அரச கரும மொழி சிங்கள மொழியெனப் பிரகடனப்படுத்துவதுடன் தமிழ் மொழிக்கு அங்கீகாரம் அளிப்பதுடன் அதற்கு வேண்டிய தகுந்த சட்ட ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்."

இக்கூற்றுப் பின்வருமாறு விளக்கப்பட்டது.

(அ) **சட்டமன்றங்கள்**: சட்டங்கள் யாவும் தமிழிலும் பிரகடனப்படுத்தப்படும்.

(ஆ) **நிர்வாகம்**: வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்கள், அரசாங்க அலுவலகங்கள், உள்ளூராட்சி சபைகள் முதலியவற்றினதும் நிர்வாக மொழி தமிழாகவிருக்கும்.

(இ) **கல்வி**: தமிழ் பேசும் மக்களின் கல்வி பயிலும் மொழி தமிழாக விருக்கும்.

(ஈ) **பொது**: நாட்டுப் பிரசைகள் யாவரும் தமது அரசாங்க அலுவல்களைச் சிங்களம் அல்லது தமிழில் நடத்தும் உரிமை உடையராவர்.

சிறி லங்கா சுதந்திரக் கட்சி ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்புக்கொண்ட அதே உரிமைகளைப் பெறுவதற்கே இப்பொழுது தமிழ் பேசும் மக்கள் சத்தியாக்கிரகம் செய்கின்றனர். இச் சத்தியாக்கிரகம் சிங்கள மக்களுக்கோ, சிங்கள மொழிக்கோ எதிராக நடைபெறுவதன்று.

தமிழ் பேசும் மக்களின் உரிமைக் கோரிக்கை என்னவெனில்:-

(அ) இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் தேசிய மொழி தமிழ் எனச் சட்டமூலமும் பரிபாலன முறையிலும் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியும் நீதிமன்ற மொழியும் தமிழாக இருத்தல் வேண்டும்.

(இ) இலங்கை முழுவதிலும் வாழும் தமிழ்பேசும் மக்களுக்குப் பின்வரும் உரிமைகள் சட்டமூலம் வழங்கப்படல் வேண்டும்:

1. பல்கலைக்கழகக் கல்வி உட்பட எல்லா நிலைகளிலும் தமிழ்மூலம் கற்கும் உரிமை.
2. அரசாங்க சேவையிற் சேருவதற்கான போட்டிப் பரீட்சைகள் யாவற்றுக்கும் தமிழ்மூலம் தோற்றும் உரிமை.
3. இலங்கையில் எப்பகுதியில் வசிப்பவராயினும் அரசாங்கத்துடன் நடத்தும் கருமங்களையும் கடிதத் தொடர்புகளையும் தமிழ்மூலம் நடத்தும் உரிமை.

(ஈ). சட்டங்கள், 'கஸெற்' அறிவித்தல்கள், அரசாங்க வெளியீடுகள், அறிவிப்புகள், படிவங்கள் யாவும் தமிழிலும் இருத்தல் வேண்டும்.

சிறீ லங்கா சுதந்திரக்கட்சித் தாபகரின் கொள்கையையே பின்பற்றுகிறோம் எனக் கூறும் இக்கட்சியினரும், பிரதம மந்திரியும் மொழி சம்பந்தமாக அன்னாரின் கொள்கையை நிறைவேற்றுவதற்கு எவ்வித இடர்ப்பாடும் இருக்க முடியாது.

சிங்கள மொழி பேசும் மக்களுக்குச் சிங்களம் எவ்வாறு முக்கியமோ அவ்வாறே தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்களுக்குத் தமிழ் மொழி முக்கியமானதாகும். நாட்டின் அரசகருமங்களிலிருந்து தமிழ் மொழியை அகற்ற எத்தனிக்கும் பொழுது தமிழ்பேசும் மக்கள் சிங்கள அரசியல்வாதிகளுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றோ, வாய் புதைத்திருக்க வேண்டுமென்றோ எவரும் எதிர்பார்க்க முடியாது.

சிங்கள மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையில் ஒற்றுமைநிலவச்செய்யவேண்டுமாயின் சிறீ லங்கா சுதந்திரக் கட்சி அரசியல் வாதிகள் தமது காலஞ்சென்ற தலைவரின் மேற்கூறப்பட்ட மொழிக் கொள்கையைச் செயற்படுத்தல் வேண்டும். ஐக்கிய இலங்கையே பொருளாதாரத் துறைகளில் உண்மையான முன்னேற்றத்தையும் உற்பத்திப் பெருக்கத்தையும் சமூக நல அபிவிருத்தியையும் ஏற்படுத்த வல்லது.

## ஐயாறன் எழுதுவது

எஸ். ஜே. வி.க்கு நேற்று பிறந்ததினமல்லவா? அவரை நேரில் பார்த்து வாழ்த்திவரச் சென்றேன். ஒருவாரமாக அவருக்குக் காய்ச்சலாம். நேற்றுத்தான் சற்றே விட்டது. அவரது ஜாதகமடங்கிய "ஈழநாடு" பேப்பரைப் பார்த்ததும், அவர் சிரித்துவிட்டு, தாம் பிறந்த நேரம் தமக்கே சரிவரத் தெரியாதென்றார். தம் தாயைக் கேட்டதற்கு, அவர் மயக்கமாக நினைவு தப்பி இருந்ததால் அவருக்கும் சரியான நேரம் தெரியாதென்றுவிட்டதாயும் புனர்பூசம் மூன்றும் பாதமோ அல்லது பூச நட்சத்திரமோ சரிவரத் தெரியாதென்றும், அப்படியிருக்க ஜாதகம் சரியோ பிழையோ தமக்குத் தெரியாதென்றும் சிரித்துக்கொண்டே சொன்னார்.

ஜாதகமும் பலனும் எழுதிய நண்பர் என் பக்கத்திலிருந்தார். இதுவரை நடந்துவந்துள்ள பலன்களைப் பார்த்ததில், தாம் கணித்த ஜாதகம் சரியே என்று அவர் கருதுவதாகச் சொன்னார்.

இந்தவிஷயம் சரியோ, பிழையோ, அதில் கூறியிருந்தபலன் சீக்கிரம் கைகூடவேண்டுமென்றும் நீடூழி நல்ல சுகத்துடன் வாழவேண்டுமென்றும் அவரை வாழ்த்திவிட்டுத் திரும்பினேன்.

∴ ∴ ∴

மற்றோர் அன்பர் எஸ். ஜே. வி. யின் வேறொரு ஜாதகக் குறிப்பை அனுப்பியுள்ளார். அதைப்பற்றி நமக்கும் எஸ். ஜே. வி.க்கும் முன்னர் ஒரு முறை வாக்குவாதம் நடந்ததாயும் முடிவில் தமது குறிப்பை அவர் ஒப்புக்கொண்டதாயும் கூறிவிட்டு, அதன் பலனைத் தெரிவிக்கிறார்.

"இக்காலத்தில் அரசியலில் தொட்ட கருமங்களிலெல்லாம் வெற்றி காட்டும். தேக மெலிவும், சுகக்குறைவும்தென்படும். போதிய ஆறுதலும், நற்போசனமும், தக்க பாதுகாப்பும் வேண்டும்" என்று அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

இக்காலத்தில் சிலர் உலகப் புகழ்எய்தஇடம்உண்டென்றும் இலங்கைப்பிரதமரின் சாதகத்தின்படியும் இவரின் சாதகத்தின்படியும் ஒருவருக்கொருவர் நல்லெண்ணம் இருக்குமேயன்றி, திருப்தியான உடன்பாட்டுக்கு வரமாட்டார்களென்றும் அதில் மேலும் சொல்லியிருக்கிறது

"ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும், எல்லாம்எனையாளும் ஈசன்செயல்!

∴ ∴ ∴

ஒரு புரக்ராசியார் வந்து புகார் ஒன்று தெரிவித்தார். "நான் சமீபகாலம்வரை கொழும்பிலே தொழில் நடத்திவந்தேன். இப்போது, யாழ்ப்பாணத்துக்கு தொழில் வாரண்டை மாற்றும்படி கேட்டிருந்தேன். ஆங்கிலத்திலும் தமிழிலும் தொழில் நடத்த புதிய வாரண்டை சிங்களத்தில் எழுதி அனுப்பியிருந்தார்கள். அத்துடன் ஆங்கிலத்தில் ஒரு மொழி பெயர்ப்பு இருந்ததென்றாலும் அதில் கையொப்பமெதுவுமில்லை. இப்படிச் செய்வது நொத்தாரிசு சட்டத்துக்கு மாறானதாகும்" என்று உணர்ச்சியுடன் கூறி, இதைப்பற்றித் தாம் ஆட்சேபிக்கப்போவதாயும், தமிழரின் மனதை இப்படியெல்லாம் வீணாகப் புண்படுத்துவதாயும் தெரிவித்தார்.

தமிழுக்கும் சட்டபூர்வமான அந்தஸ்து கிடைக்கும்வரை, இப்படியெல்லாம் நடக்கும்தானே! அந்த சட்டபூர்வமான

(6-ம் பக்கம் பார்க்க)

## இரத்தினக் கம்பளம்

பதுமன்

பழைய நினைவுகள் சில சமயங்களில் இனிமையாகவும் இதமாகவும் இருப்பதுண்டு. சென்ற சிலவருடங்களாக இலங்கையில் ஏற்பட்டு வரும் பிரிவு மனப்பான்மையும் வகுப்புக் கலவரமும் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் மிகுந்த வருத்தத்தைக் கொடுத்து வருகின்றன. 1958 இல் வகுப்புக் கலவரம் நடைபெற்றபோது சில சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் கொழும்பில் கூடி நிலைமையை ஆராய்ந்தனர். இக்கூட்டத்தில் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் பௌத்தர்களும் முஸ்லிம்களும் கலந்துகொண்டனர்.

சிங்களர் பங்கு பற்றிய ஒரு கூட்டத்தில் மிகச் சாவதானமாகவே தமிழ்ப் பிரமுகர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனராம், தமிழரும் சிங்களவரும் சகோதரர்களைப் போல வாழ்ந்தால்தான் நாடு பல துறைகளிலும் முன்னேற முடியும் என்ற கருத்தை எவரும் ஆட்சேபிக்கவில்லை. எனினும் நட்புறவு நன்கு பாதிக்கப்பட்டுவிட்டதே, அரிசியிலிருந்து நீங்கிய உமியைப் பின்னர் எப்படிச் சேர்த்து வைப்பது என்றவிதமாகப் பலரும் பேசினர்.

### கணவன் மனைவி சச்சரவு

அப்போது கிறிஸ்தவப் பெரியார் ஒருவர் எழுந்து மிகக் கண்ணியமாகப் பேசினார். அவர் ஒரு தமிழர். அவர் கூறிய கருத்து இது: 'யாழ்ப்பாணத்திலே கணவனும் மனைவியும் இடைக்கிடை சண்டை போட்டுக்கொள்வது வழக்கம். இது காரணமாக அவர்கள் ஒருவரோடு ஒருவர் பேச்சு வார்த்தைகளே வைத்துக்கொள்ள மாட்டார்கள். சமையல்கூடப் புறம்பாகவே நடைபெறும். ஒரு வீட்டிலே வாழும் இருவர், அதுவும் கணவனும் மனைவியும் புறம்பாகச் சமைத்துச் சாப்பிடுவது பலருக்கு வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் யாழ்ப்பாணத்தில் இப்படியும் நடைபெறுவதுண்டு. இந்த நிலைமை நீடிப்பதில்லை. இரண்டு கிழமைகளுக்கு அல்லது இரண்டு மாதங்களுக்குத்தான் இந்த "கெடுபிடி". அப்புறம் எல்லாம் சரியாய்விடும். மனைவி அறுசுவை உண்டியுடன் தனது கணவனுக்குச் சோறு கறி பரிமாறுவார். கணவன் மகிழ்ச்சியுடன் உண்பார்.

தமிழர் சிங்களருக்கிடையேயும் இந்த விதமான ஒரு நிலைமைதான் இப்போது ஏற்பட்டுக்கொண்டு வருகின்றது. நாங்கள் பொறுமையாக இருப்போம். விரைவில் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும்...."

அப்பெரியார் கூறியதைக் கேட்டு எல்லோரும் வயிறு குலுங்கச் சிரித்தனராம். கூட்டம் எவ்வித தீர்மானங்களையும் நிறைவேற்றாமல் தேநீர் விருந்துடன் முடிவடைந்தது.

இந்தக் கதையைக் கொழும்பிலிருந்து வந்த எனது நண்பர் கூறியபோது பின்வரும் அடிகள்தான் நினைவுக்கு வந்தன:

"பரமசிவன் அருள் புரிய
வந்து வந்து போவார்!
பதிவிரதைக் கின்னல் வரும்
பழையபடி தீரும்"

### தாடிக்கார எம். பி.

'தினமின' என்ற சிங்களத் தினசரி சமீபத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்தைப்பற்றி எழுதியிருப்பதை வாசகர்கள் அறிவார்களோ, என்னவோ. அக்

(6-ம் பக்கம் பார்க்க)

# சீன-இந்திய எல்லைகளில் இந்திய விமானிகளுக்கு பயிற்சி

புதுடில்லி, மார்ச் 31

சீன-இந்திய எல்லைப் பிரதேசத்தில் இந்திய விமானிகளுக்கு ரஷ்ய விமானிகள் பயிற்சியளித்து வருகின்றனர் என்று பிரதம மந்திரி நேரு நேற்று ராஜ்ய சபையில் அறிவித்தார். இந்த விமானங்களை ஓட்டுவதற்கு இந்திய விமானிகள் நன்கு பயிற்சி பெற்றதும் ரஷ்யவிமானிகள் அங்கு செல்லமாட்டார்கள் என்று பிரதமர் தெரிவித்தார். இந்த விமானங்களை ரஷ்யர்கள் எல்லைப்பிரதேசத்தில் ஓட்டுவதில்லையென்றும், இந்திய விமானிகள் தான் ஓட்டுகிறார்கள் என்றும் நேரு கூறினார்.

இரகசிய தகவல்கள் ரஷ்யர்களுக்குக் கிடைத்துவிடாதபடி எச்சரிக்கையுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் சொன்னார்.

ராஜ்ய சபையில் சுதிர்கோஷ் என்ற அங்கத்தவரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் நேரு இத்தகவல்களை வெளியிட்டார்.

எல்லைப்பிரதேச அபிவிருத்திக்கென இந்தியா ஏராளமான விமானங்களை ரஷ்யாவிடம் வாங்கியிருப்பதாகவும், பயிற்சியளிக்க வந்துள்ள ரஷ்யர்கள் இரண்டொரு வாரங்களில் தாய்நாடு திரும்பிவிடுவார்களென்றும் நேரு ராஜ்ய சபையில் அறிவித்தார்.

## அமெரிக்க தனங்கள்

நியூயோர்க், மார்ச். 31

வெளிநாடுகளில் உள்ள அமெரிக்கத் தனங்கள், எதிர்காலத்தில் மூடப்படும், அல்லது குறைக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையால் வெளிநாடுகளில் செலவாகும் செலாவணி பெருமளவு மிஞ்சும் என்று கருதப்படுகிறது.

## பராக்கா அணை

புதுடில்லி மார்ச். 31

மேற்கு வங்காளத்திலுள்ள டாராக்கா, அணைத்திட்டம் தாமதமின்றி நிறைவேற்றி வைக்கப்படும் என்று நேற்று லோக் சபையில் அறிவிக்கப்பட்டது.

## ராஜ்யசபை பின் போடப்பட்டது

நேற்று ராஜ்யசபை திகதி குறிப்பிடப்படாமல் பின் போடப்பட்டது. ஒத்திபோடப்படுவதற்கு முன் ஒரிஸாபற்றிய தீர்மானம் ஒன்றை சபை ஏற்றுக்கொண்டது.

## துணை துறைமுகம்

கல்கத்தா துறைமுகத்து உதவியாக துணை துறைமுகமொன்று ஹொல்டியாவில் அமைக்கப்பட்டுவருகிறது. கல்கத்தா துறைமுகத்தில் இடநெருக்கடி ஏற்படுவதை இத்துறைமுகத்தின் மூலம் சமாளிக்க முடியும் என்று கருதப்படுகிறது.

# காங்கோ-லாவோஸ்பற்றி நேரு-ரஸ்க் சம்பாஷணை

## பிரதிபலன் அடுத்த வாரம்தெரியுமாம்

புதுடில்லி, மார். 31

பாங்கொக்கில் நடந்த தென் கிழக்காசிய ஒப்பந்த நாடுகள் மகாநாட்டில் கலந்துகொண்டபின் அமெரிக்க வெளிவிவகார மந்திரி திரு. டீன் ரஸ்க் நேற்று புதுடில்லி வந்து பிரதம மந்திரி நேருவுடன் ஆலோசனைகள் நடத்தினர்.

பிரதமர் நேருவும், டீன் ரஸ்க்கும், ஆலோசனைகள் நடத்தியபின் பத்திரிகை நிருபர்களிடம் பேசினர்கள். லாவோஸ், காங்கோ போன்ற சர்வதேசப் பிரச்சினைகள்பற்றி தாங்கள் பேச்சு நடத்தியதாகத் திரு. டீன் ரஸ்க் கூறினர். "அமெரிக்காவைப் பொறுத்தவரை, திரு. நேருவுடன் நான் நடத்திய ஆலோசனைகளினால் பெரும் பயன் ஏற்படும் என்றே நம்புகிறேன். ஆலோசனைகளின் பிரதி பலனை அடுத்த இரண்டொரு வாரங்களில் காணக்கூடியதாக விருக்கும்' என்று டீன் ரஸ்க் குறிப்பிட்டார். அவர் நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் லாவோஸ் நெருக்கடி சமாதானமாகத் தீர்ந்துவிடும் என்று அமெரிக்கா நம்புகிறது என்றார். சர்வதேசப் பிரச்சினைகளைச் சமாதானமாகத் தீர்த்துக்கொள்ள சீனத்துடன் அமர்ந்து பேச்சுநடத்துவதற்கு ஆட்சேபனை இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

### ஒருமித்த கருத்து

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டீன் ரஸ்க்கும், தாமும் லாவோஸ், காங்கோ பிரச்சினைகள் சம்பந்தமாக பெருமளவு ஒருமித்த கருத்துக் கொண்டிருந்தாக நேரு கூறினர். லாவோஸ் நெருக்கடிக்கு பிரிட்டன் தெரிவித்துள்ள யோசனைகளை ரஷ்யா ஏற்றுக்கொள்ளுமென்றே தாம் நம்புவதாக அவர் குறிப்பிட்டார். பாங்கொக் 'சியாடடோ' மகாநாடுபற்றிய நேருவின் கருத்துக்களை நிருபர்கள் வினவியபோது, அதுபற்றி அவர் ஒன்றும் கூற மறுத்துவிட்டார். அந்தக் கட்டத்தில் திரு. டீன் ரஸ்க் குறுக்கிட்டு 'சியாட்டோ மகாநாடுபற்றி தாங்கள் பரிசீலனை செய்யவில்லையென்றார்.

### பிரிட்டிஷ் மந்திரி சுவர்ணப்பூமா ஆலோசனை

நேற்றிரவு, லாவோஸ் தலைவர் இளவரசர் சுவர்ணப்பூமா பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரியைச் சந்தித்து, லாவோஸ் நெருக்கடி பற்றி ஆலோசனை நடத்தினர்.

ரஷ்யாவுக்கு லாவோஸ்பற்றிப் பிரிட்டன் தெரிவித்த யோசனைகளுக்கான ரஷ்ய பதில் எந்த நிமிஷத்திலும் கிடைக்கக்கூடும் என்று லண்டனில் கருதப்படுகிறது. பிரிட்டன் தெரிவித்துள்ள யோசனைகளைப் பொதுவாக ஏற்றுக்கொண்டு, ஒரு மாற்றுத் திட்டத்தை ரஷ்யா சமர்ப்பிக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. முதலில் லாவோஸில் போர் நிறுத்தம் ஏற்படவேண்டும் என்று பிரிட்டிஷ் திட்டம் கூறுகிறது இந்த நிபந்தனைக்கு ரஷ்யா ஒரு மாற்று யோசனை கூறலாம் என்றும், சமாதானப் பேச்சுக்களில் சீனவையும் கலந்துகொள்ள அனுமதிக்க வேண்டுமென்று கோரலாம் என்றும் நமப்படுகிறது.

### பிரிட்டன் நம்பிக்கை

"லாவோஸ் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்த்துவிடலாம் என பிரிட்டன் நம்புகிறது' என்று பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி கருத்து வெளியிட்டிருக்கிறார்.

## படை குறைப்பு பற்றி இப்பொழுது விவாதம் இல்லை

வாஷிங்டன், மார். 31

ஐ. நா. பொதுச்சபையின் இப்போதைய கூட்டத்தொடரில் படை குறைப்பு சம்பந்தமான விவாதத்தை நடத்தாமல் பின்போடுவதற்கு ரஷ்யாவும், அமெரிக்காவும் இணங்கியிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

படை குறைப்புப்பற்றி விரிவான அடிப்படையில் இப்பொழுதே விவாதம் நடத்தப்படவேண்டும் என்று ரஷ்யா முன்னர் கருத்துத் தெரிவித்திருந்தது. அமெரிக்கப் பிரதிநிதி அட்லாய் ஸ்டீவன்சனும், சோவியத் வெளிநாட்டு மந்திரி குரோமிக்கோவும் சந்தித்துப் பேசியபின் இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.


## நீரழிவு வியாதிக்கு

புத்தம் புதிய மருந்து

ஜெர்மன் ஆராய்ச்சி நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட

### "டயமெலன்"

(DIA MELLON)

வியாதியஸ்தர்களுக்கு இலவச ஆலோசனையும் அளிக்கப்படும்.

25 வில்லைகள் கொண்ட போத்தல் ஒன்றுக்கு ரூ. 6-50

இலங்கை விநியோகஸ்தர்கள்:

போன்: 4805

நியூ கொழும்பு மெடிக்கல் ஸ்டோர்ஸ்

82, மெயின் வீதி,

கொழும்பு.


# 'மீண்டும் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளலாம்!'

## ஆசிரிய சங்கத் தலைவருக்கு தற்காலிக தலைவர் அழைப்பு

சமீபத்தில் வடமாகாண ஆசிரியர் சங்கத்தில் தமிழுரிமை சத்தியாக்கிரகம் முதலிய விடயங்கள்பற்றி எழுந்த தகராறுகளைப்பற்றியும், சங்கத்தின் எதிர்காலம்பற்றியும் சங்கத்தின் தற்காலிகத் தலைவர் திரு. ஜே. எட்வேட் பின்வருமாறு கூறுகிறார்:

மேற்படி கூட்டம் நூறு அங்கத்தவரின் வேண்டுகோளின்படி கூட்டப்பட்டது. இது ஒரு விசேஷ பொதுக்கூட்டம். வடமாகாண நிலைமையை ஆராயவும், இக்கால கட்டத்தில் ஆசிரியர் தமது உத்தியோக நலவுரிமைகளையும், கல்வி நலவுரிமைகளையும் பாதுகாக்க என்ன நடவக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடனும் இவ்விசேட பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது.

பல்வேறு அரசியல் கருத்துக்களைக்கொண்ட பெருந்திரளான ஆசிரியர்கள் சமூகமளித்த இக்கூட்டத்தில் கீழ்க்காணும் பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது:—

"இன்றைய சத்தியாக்கிரக இயக்கத்தின் நோக்கங்களுள் இலங்கைவாழ் தமிழ்ப்பேசும் மக்களின் மொழியுரிமைகளைப் பெறுவதும் ஒன்றாகும் என்ற காரணத்தால் இச்சங்கம் மேற்படி இயக்கத்துச்குத் தனது பரிபூரண ஆதரவை அளிக்க வேண்டுமெனத் தீர்மானிக்கிறது."

இதற்கு அடுத்தாக, சத்தியாக்கிரக இயக்கத்துக்கு ஆதரவளிக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் சங்கம் ஓர் ஊர்வலத்தை நடாத்தவேண்டுமென்ற ஒரு தீர்மானம் இதே கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதும், தலைவர் உடனடியாக பதவியைவிட்டு செயலாளருடனும் பிறருடனும் கூட்டமண்டபத்தைவிட்டு வெளியேறினர். கூட்டத்தில் தொடர்ந்து சமூகமளித்தோர் இதன்பின் ஒரு செயற்குழுவைத் தெரிவுசெய்து, சங்கம் ஏற்றுக்கொண்ட இரு தீர்மானங்களையும் செயலாற்ற முடிவுசெய்தனர்.

இச் செயற்குழு, இதர உத்தியோகத்தரின் ஆலோசனையுடன், ஆங்கில தமிழ் ஆசிரியர் சேர்ந்த ஓர் ஊர்வலத்தை "வடமாகாண ஆசிரியர்" என்ற கொடியின்கீழ் வெற்றிகரமாக நடத்திற்று. இவ்வூர்வலத்தில் 1500க்கு மேற்பட்ட ஆசிரியர் கலந்துகொண்டனர்.

இதன்பயனுக அனுதாப ஊர்வலமொன்றை நடத்த வேண்டுமென்று சங்கத்தின் பெரும்பகுதி உறுப்பினருடைய ஆவல் நிறைவேற்றப்பட்டு விட்டது. அதே நேரத்தில் சங்கம் உத்தியோகபூர்வமான முறையில் கலந்துகொள்ளாது வெளியில் நின்றுவிட்டது. எனவே, சங்கம் அரசியற் போராட்டங்களில் இழுக்கப்பட்டுவிடுமே என்று அஞ்சிப் பதவியிலிருந்து நீங்கிய தலைவர் மீண்டும் பதவியை ஏற்பதற்குத் தடையில்லை."

### நேருவுக்கு கெனடி செய்தி

இந்தியாவில் புதிய அமெரிக்கப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கும் பேராசிரியர் கால்பிரேக் பிரதமர் நேருவிடம்கொடுப்பதற்கென அதிபர் கெனடி தம்மிடம் ஒரு செய்தியைக் கொடுத்திருப்பதாக நேற்று வாஷிங்டனில் கூறினர்.

## வகுப்புவாத கட்சிகள்

வகுப்பு, மதம், போன்ற பெயர்களைக் கொண்டு இயக்கும் அரசியல் கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடுவதைத் தடைசெய்ய வேண்டுமென்று ஓர் அங்கத்தவர் தெரிவித்த யோசனையை காங்கிரஸ் பார்லிமென்டரிக்குழு பரிசீலனை செய்து வருகிறது இந்த யோசனையை பரிசீலனை செய்ய வேண்டுமென்று நேரு தெரிவித்திருக்கிறார்.

## ஸ்தலஸ்தாபனங்களுக்கு கூடுதல் அதிகாரம்

ஸ்தலஸ்தாபனங்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவதென்று ஆஸ்திர அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது என்று முதன்மந்திரி சஞ்சீவையா அறிவித்திருக்கிறார்.

## திருமணம்

**மணமகன்:** திரு. இராஜ. அரியரத்தினம்
(ஆசிரியர்: 'ஈழநாடு')
காலஞ்சென்ற திரு. இராஜரத்தினம், திருமதி இராசம்மா இராஜரத்தினம், 'கலாநிதி', சாவகச்சேரி. ஆகியோரின் மகன்.

**மணமகள்:** செல்வி ராதா
(ஆசிரியை, H. F. கன்வன்ட், அநுராதபுரம்.)
திரு. எஸ். நடராஜா, ஜே. பி., யு. எம்., காலஞ்சென்ற திருமதி நடராஜா, 'பிருந்தாவனம்', அநுராதபுரம். ஆகியோரின் மகள்.

**திருமணம்:** 7-4-61 வெள்ளிக்கிழமை காலை.

**வரவேற்பு:** அன்று மாலை 5 மணியிலிருந்து 7-30 வரை கூழாவடி ஆனைக்கோட்டையிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இவ்வைபவத்துக்கு அன்பர்களையும் உறவினரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கூழாவடி,
ஆனைக்கோட்டை.

B. R. தேவராஜனும்
பாரியாரும்

# 300,000 தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வர்?

## முக்கிய மூன்று கோரிக்கைகள் பற்றி யூனியன்கள் ஆலோசனை

கொழும்பு, வெள்ளி

மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து பொது வேலை நிறுத்தம் ஒன்றை நடத்துவதுபற்றி தோட்டத் தொழிலாளர் யூனியன்கள் ஆலோசித்துவருவதாகத் தெரிகிறது.

தோட்டங்கள் கைமாறப்படும்போது, சேவைக்கால உபகாரப் பணம் வழங்கப்பட வேண்டும். தோட்டப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதில் தாமதம் கூடாது. வேறு துறைகளில் வேலை செய்யும் தொழிலாளருக்கு வழங்கப்படும் விசேஷ வாழ்க்கைப்படி தோட்டத் தொழிலாளருக்கும் வழங்கப்படவேண்டும். இவை தான் தொழிலாளர்கள் சார்பில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் முக்கிய மூன்று கோரிக்கைகள்.

இந்தக் கோரிக்கைகளைமுன் வைத்து வேலைநிறுத்தம் ஒன்று நடைபெறுமெனில் அதில்சுமார் 300,000 தொழிலாளர் கலந்து கொள்ளுவர்.

இதுவிஷயமாகலங்காதோட்டத் தொழிலாளர் யூனியன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடனும், இலங்கைதோட்டத் தொழிலாளர் யூனியனுடனும் ஆலோசனை நடத்திவருகிறது.

## விடுமுறையை சேர் ஒலிவர் ரத்துச் செய்தார்

கொழும்பு வெள்ளி

நுவரெலியாவுக்கு விடுமுறையில் சென்று ஓய்வெடுக்கத் திட்டமிட்டிருந்த கவர்னர் ஜெனரல் சேர். ஒலிவர்குணதிலகா தமது திட்டத்தைக் கடைசி நேரத்தில் ரத்துச் செய்துவிட்டார். இந்நேரத்தில் அவர் கொழும்பில் தங்கியிருக்க வேண்டியது அவசியம் எனக் கருதப்பட்டதாலேயே அவர் நுவரெலியப் பிரயாணத்தை ரத்துச் செய்யவேண்டி யேற்பட்டதாம்.

## இலங்கைக்கு இந்திய ரயில் பெட்டி

புதுடில்லி மார்ச் 31

இலங்கை, மற்றும் தென் கிழக்காசிய நாடுகளுக்கு ரயில் பெட்டிகளை இந்தியா அனுப்பும் என்று இந்திய ரெயில்வே உபமந்திரி திரு. இராமசாமி அறிவித்திருக்கிறார்.

## 'தமிழரசுக்கட்சி தவருனவழியில் எம்மைச் செலுத்தவில்லை'

### முஸ்லிம் பிரமுகர் கருத்து

கோப்பாய், வெள்ளி

"தமிழரசுக் கட்சி எம்மைப் பிழையான வழியிலிட்டுச் செல்லுவதாகக் கூறும் கருத்தை நான் முற்றாக மறுக்கிறேன்" என்று யாழ்ப்பாணம் முஸ்லிம் பிரமுகரும் மாநகரசபை அங்கத்தவருமான ஹாஜி வி. எம். எம். அபுசாலி ஜே. பி. கூறுகிறார். இப்பொழுது நடைபெறும் தமிழுரிமைப் போராட்டத்தில் முஸ்லிம்கள் நிலைபற்றி எழுந்துள்ள கருத்து வேறுபாடுகள் பற்றி அபிப்பிராயம் தெரிவித்த அவர் பின் வருமாறு கூறுகிறார்:—

முதலாவதாக நாமெல்லோரும் தமிழர்தாம். எமது தாய்ப் பாஷையும் தமிழே. எமது வணக்கத்திலேயும் நாம் மனந்திறந்து பிரார்த்திப்பது தாய்மொழியாகிய தமிழிலே தான். கிறிஸ்தவர்களுக்கு வேதமொழி லத்தீனை விருப்பது போல, சைவர்களுக்கு வேதமொழி சமஸ்கிருதமாக இருந்ததுபோலவே முஸ்லிம்களுக்கும் அரபு மொழி. இலங்கையில் தமிழர் மதத்தால் முப்பெரும் பிரிவினராக இருந்தாலும் இனத்தால் மொழியால் தமிழர்களென்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. தமிழ் பேசும் கிறிஸ்தவர்களையும் சைவர்களையும் தமிழர்களாகக்கொண்டு இஸ்லாமியரை வேறுபிரித்துவைப்பது தவறு. மதத்தால் மாறுபட்டிருப்பினும் மொழிவழியால் நாமெல்லோரும் தமிழரே. இனிமேலாவது இஸ்லாமியரைத் தமிழ் மக்களிலிருந்து வேறுபிரித்துச் சொல்வதை விட்டுக்கொள்ளுமாறு அனைவரையும் தமிழ்ப் பேசும் மக்கள் சார்பிலே கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது நடைபெறும் தமிழ் உரிமைப் போராட்டத்தில் ஒவ்வொரு முஸ்லிம் மகனும் தன்னுயிரையும் தியாகம் செய்யத் தயங்கமாட்டான். இப்போராட்டத்தில் எமக்கும் சரிசம பங்குண்டு,

தமிழுரிமைப் போராட்டத்தைக் குறைகூறுகின்றவர்கள் சத்திய அடிப்படையில் சாத்விக நடைமுறையில் நியாயம் நீதிகோரி நடைபெறும் இப் போராட்டத்தை நேரில் வந்து பார்த்தார்களானுல் அவர்களும் கலந்து கொள்வார்கள்.

கடந்த காலங்களில் எமது அரசியற் போக்கு எப்படியிருந்தபோதிலும் இன்று கட்டுக்கோப்பான ஓர் இயக்கத்தின் கீழ் ஒன்றுபட்டிருக்கிறோம். மொழிப் பிரச்சினை தீர்ந்துவிட்டால் எமது பிரச்சினைகள் தீர்ந்துவிட்டதாகக் கருத முடியாது. மொழிப் போராட்டம் எமது உரிமைப் போராட்டத்தின் ஓர் அம்சமே. சுயநிர்ணய உரிமைகள் கிடைக்கும்வரை போராடியேயாகவேண்டும். நேர்மையும் சிந்தையுமுள்ள தலைவர்கள் ஆரம்பிக்கும் எந்தப் போராட்டத்திலும் கலந்து கொள்ளத் தயாராயிருக்கிறோம்.

## 'தமிழன்னையின் பத்துக் கட்டளைகள்'

உடுப்பிட்டி வெள்ளி

தமிழன்னையின் பத்துக்கட்டளைகள் என்ற தலைப்புடன் கொழும்பிலிருந்து வெளிவந்திருக்கும் துண்டுப் பிரசுரம் ஒன்றில் இன்னும் சில மாதங்களில் தமிழரின் விடுதலை இயக்கம் ஆரம்பமாகுமென்றும், இதற்குள் தென்னிலங்கையில் தமது உடைமைகளையும் மூலதனங்களையும் வைத்திருக்கும் தமிழர் அவற்றைச் சமயோசிதமாக வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு மாறறவேண்டியது அவசியமென்றும், அரசியற்கட்சிகளை நம்பியிருப்பது அறிவீனமென்றும், குடிப்பழக்கத்தை ஒழிக்கவேண்டுமென்றும் கூறுகிறது.

மேலும், தமிழனைத் தமிழன் தூற்றுவதும், தமிழனுக்குத் தமிழன் துரோகம் செய்வதும் தவறென்றும் இப் பிரசுரம் கூறுகிறது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள் காலை 7, பகல் 12.45, மாலை 6, இரவு 9,

**சனி, 1-4-61**

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள், பகல் 12-00 சித்திர கானம். 1-00 கதம்ப இசை, மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழல், இரவு 7-15 பாமாலை, 7-30 நேயர் கடிதம், 7-45 ருக்மணி சர்மா-பாட்டு, 8-15 அறிவுச் சுழல், 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 இஸ்லாமிய கீதங்கள், 10-00நேயர்விருப்பம்

**ஞாயிறு, 2-4-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிறிஸ்தவ கீதங்கள், 8-30 ஞான அஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப் பாடசாலை, 9-30 கதம்ப இசை, 11-30 சிறுவர் மலர், பகல் 12-15 நேயர் விருப்பம், 1-00 மாதர் பகுதி, மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள்,5-45 திரை இசை, 6-30 தாளவாத்தியக் கச்சேரி, இரவு 7-00 மாதர் கேட்டவை, 7-45 எஸ். குலசேகரம்-பாட்டு. 8-45 இஸ்லாமிய கீதங்கள், 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.)

### திருச்சி

(செய்திகள் காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

**சனி, 1-4-61**

காலை 7-30 இசைக்கோவை காரைக்குடி வி. ஏ. கமலா-வயலின், 8-15 கம்பன் விழா, பகல் 1-00 துதிப் பாடல்கள், 2-15 இசைக்கோவை, மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 6-15 கிராம நிகழ்ச்சிகள், இரவு 7-30 'வம்சாவளி'-நாடகம், 8-00 திரைப்படஇசை 9-30 அகில பாரத சங்கீத நிகழ்ச்சி.

**ஞாயிறு, 2-4-61**

காலை 7-30 டி. வி. சிவசிதம்பர ஐயர்-புல்லாங்குழல், 8-15 எஸ். ராஜம் - பாட்டு, பகல் 12-00 நீங்கள் கேட்டவை,12-30 சூரியகாந்தி – கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 2-30 மெல்லிசை, 3-30 சுலோசன பட்டாபிராமன் - பாட்டு, மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 6-15 கிராம நிகழ்ச்சிகள், இரவு 7-30 எட்டயாபுரம் வி. நரஸிம்ஹன்-பாட்டு, 8-30 டி. வி. சிவசிதம்பர ஐயர் புல்லாங்குழல், 9-15 வாத்திய இசை, 9-45 ஈஸ்டர் சங்கீதம்.

## 2-வது வைத்தியக் கல்லூரி

### சுவீப் நிதியில் அமைக்கப்படும்

கொழும்பு வெள்ளி

இரண்டாவது வைத்தியக் கல்லூரி அமைப்பதற்கு ஆஸ்பத்திரி சுவீப் நிதியிலிருந்து உடனடியாக முப்பது இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுப்பது பற்றி பதில் நிதிமந்திரி திரு. ஜோர்ஜ் ராஜபக்சவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் படி சுகாதாரமந்திரி ஏ. பி. ஜயசூரியாவை அரசாங்கம் கேட்டுள்ளது.

ஆஸ்பத்திரி சுவீப் நிதியில் போதியளவு பணம் கிடைக்குமாதைல் இரண்டாவது வைத்தியக் கல்லூரி அமைக்கும் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்கும் படியும் மூன்று மாதங்களுக்குள் கட்டிட வேலைகள் முடிவடைந்துவிட வேண்டுமென்றும் சுகாதார அமைச்சருக்கு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## நால்வரை விசர் நாய் கடித்தது

விசர் நாய் ஒன்று கடித்ததனுல் நால்வர் காங்கேசன் துறை அரசாங்க வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந் நாய் இரண்டு கோழிகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும் கடித்துவிட்டது. காங்கேசன் துறை பட்டினசபைக்கு அறிவித்ததின் பேரில் நாய் சுட்டுக்கொல்லப்பட்டது.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பிலுள்ள E N 630, A 50 கார் பற்றியும் 5 டயரும் புதியன. 40 ஆயிரம் மைல்கள் ஓடியுள்ளது. விபரங்கட்கு: ஆ. நடராசா, தாவடி தெற்கு. கொக்குவில். Advt. 76

### புற்று நோய் (Cancer)

பல்லாண்டுகளாக செயல் மூலம் நிரூபிக்கப்பட்ட ஆயுள் வேத அரிய மருந்து "யோகீஸ்வர ரசம்" புற்றுநோயை வேரறுக்கும்.

பூரணசுகமடைந்த ஒரு வரது சான்றிதழ்.

எனது மூத்த சகோதரி கெற்பப்பையில் புற்றுநோய் பீடிக்கப்பட்டு, கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் 20 காந்த ஊசிகளும் ஏற்றப்படுத்தியதன் மேலும் சுகங்கிடையாமையினுல் யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஆயுள்வேத வைத்தியர் திரு. பொ. செல்லையாவின் யோகீஸ்வர ரசம் என்னும் அவுசதம் இருபது நாட்களுக்குச் சாப்பிட்டுப் பூரண சுகம் அடைந்தார்.

—க. பொன்னுத்துரை
அரசாங்க உத்தியோகத்தர்

விபரங்கட்கு
பொ. செல்லையா
ஆயுள் வேத வைத்தியர்
Advt. 75 கந்தர்மடம்.

### விற்பனைக்கு தீன்புகையிலை

யாழ்ப்பாணம் – மலையாளம் புகையிலை கூட்டுறவு ஐக்கிய சங்கத்தில் 140 சிப்பம்(16000 இருத்தல்) புகையிலை விற்பனைக்கு இருக்கின்றது. யாழ்ப்பாணம் ரெக்கிளமேஷன் வீதியிலுள்ள யாழ்ப்பாணம்-மலையாளம் புகையிலை ஐக்கிய சங்கத்தில் பார்வையிடலாம்.

விண்ணப்பப் பத்திரங்கள் கூட்டுறவு இன்சூரன்ஸ் இலாகா, 103, சதாம் வீதி, டீமெல் கட்டிடம், கொழும்பு-என்றவிலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். 10-4-61 பகல் 11 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
Advt. 78

### தேகவியோகம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதல் அதிபரான காலஞ்சென்ற திரு. ச. அப்பாப்பிள்ளையின் புத்திரரும், குருநாக்கல் கச்சேரியின் பிரதம லிகிதராக இருந்து 15 வருடங்களுக்குமுன் இளைப்பாறியவரும், சிலகாலம் 'இந்து சாதனம்' பத்திரிகைக் காரியாலயத்தில்அதிபராக கடமையாற்றியவருமான திரு. அ. கனகசபாபதிஅவர்கள் 8,ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணையில் உள்ள தமது வாசஸ்தலத்தில் 27-3-61 இரவு 1-30 அளவில் காலமாகிவிட்டார். அவரது ஈமச்சடங்குகளில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் இதனுல் நன்றி தெரிவிக்கின்றோம்.

இப்படிக்கு
Advt. 81 ம. கனகரெத்தினம்

### சன்மானம்

31 - 3 - 61 வெள்ளிக்கிழமை பகல் குருநாகலிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்த யாழ்தேவியில் பிரயாணஞ் செய்தேன். எனது பச்சைநிற பிரயாண 'பாக்' காணமற் போய்விட்டது. அதற்குள் எஸ். எஸ். ஸி. தராதரப்பத்திரமும் நியமனக்கடிதமும் வேறு சில பொருள்களும் உள. இதைக் கண்டெடுத்துத் தருபவர்களுக்குத் தகுந்த சன்மானம் அளிக்கப்படும்.

ஆ. இலட்சுமிப்பிள்ளை
ஆசிரியை
பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம். Advt. 82

## ஹான்ட்லூம்ஸ்

(இந்திய அரசாங்கம்)

7, செட்டியார் தெரு, கொழும்பு 11.

### புதுவருடக் கொண்டாட்டத்துக்கு

புதுரக ஆடையணிகளோ,
ஜோடனைத் துணிமணிகளோ
உங்களுக்குத் தேவையா ?

பல்வேறு ரகங்களில் எம்மிடமுள்ள அற்புதமான சேலைகள், ஷேர்ட் துணிகள், சாரங்கள், வேட்டிகள், கம்பளங்கள் திரைச்சேலைகள், வீட்டுப்பாவனைத் துணிமணிகள், ஆடையணிகளுக்கான ஜவுளி ரகங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு, உங்களுக்குத் தேவைப்படுவதைத் தெரிந்தெடுங்கள்.

**மிகக்குறைந்த விலையில் மிகச்சிறந்த பொருட்கள்**

மேற் குறித்த ரகத் துணிமணிகள் யாவும், யாழ்ப்பாணம், மெயின் வீதி, அன்னை கட்டிடத்திலுள்ள ஹான்ட்லூம்ஸ் கிளையிலும் கிடைக்கும்.

# வேலைத்தலத்தில் அரிசி வாங்குவதில்லை

## 2 ஆஸ்பத்திரி யூனியன்கள் செய்துள்ள முடிவு

யாழ்ப்பாணம், சனி

கூப்பன் அரிசி தாங்கள் வேலை செய்யும் இடங்களுக்குக் கொண்டுவந்து கொடுக்கப்பட்டால் ஏற்றுக் கொள்வதில்லை யென்று அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையும் பயிற்றப்பட்ட ஆஸ்பத்திரி சேவையாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையும் கூட்டாக நடத்திய கூட்டமொன்றில் முடிவுசெய்தன.

இன்றைய நிலையில் வேலை நிறுத்த மெதிலும் இறங்குவதில்லையென்றும் எந்தப் பிரச்னையையும் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு ஆட்சிக்குழுவுக்கு அதிகாரம் அளிப்பதென்றும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது,

கூட்டத்துக்கு திரு. செ. ஆசீர்வாதம் தலைமைவகித்தார்.

பயிற்றப்பட்ட ஆஸ்பத்திரி சேவையாளர் சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் அ. ஞானப்பிரகாசம், அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக்கிளைக் காரியதரிசி க. துரைராசா, அரசினர் ஆஸ்பத்திரி மருந்து கலப்பவர்கள் சங்க யாழ்ப்பாணக் கிளைக் காரியதரிசி திரு. க. நடராசா, ஐ. கார்த்திகேசு ஆகியவர்களும் பேசினர்கள்.

### தோட்டத் தொழிலாளர் ஆதரவு

புசல்லாவ

புசல்லாவைப் பகுதியிலுள்ள தேயிலைத்தோட்டங்களில் வசிக்கும் தொழிலாளர் பலர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக்கட்சியினரால் நடாத்தப்படும் சத்தியாக்கிரக இயக்கங்களில் கலந்துகொள்ளுவதற்காக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கு சென்றுள்ளனர்.

இப்போது மலைநாட்டில் பல இடங்களிலும் தொழிலாளர்கள் தினசரி கோவில்களில் சத்தியாக்கிரகம் வெற்றிபெற வேண்டுமென்றும், இலங்கைத் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் அனைத்தும் விரைவில் கிடைக்கவேண்டுமென்றும் பிரார்த்தனை நடத்துகின்றனர்.

### தந்தி சேவகர் தாக்கினராம்

யாழ்ப்பாணம், சனி

தபால் தந்தி தொழிலாளர் யூனியன் யாழ்ப்பாணக் கிளைச் செயலாளரை மத்திய தந்திக் கந்தோரின் எல்லைக்குள் வைத்து ஒரு தந்திச் சேவகர் தாக்கியதாகத் தெரிகின்றது. இது பற்றி ஒரு விசாரணையை நடத்தும்படி தபாற்பகுதி கேட்டிருக்கின்றது.

### வேலணை மத்தியகல்லூரி மாணவர்களுக்கு இரண்டு பரிசு

ஊர்காவற்றுறை வெள்ளி

கொழும்பு விவேகானந்த சபையாரால் சென்ற ஆண்டு நடாத்தப்பட்ட சைவசமய பாட பரீட்சையில், அகில இலங்கையிலும் மத்திய பிரிவுக்குரிய 2-ம் 3-ம் பரிசுகளை வேலணை மத்திய கல்லூரி மாணவர்களான பாலசுந்தரம், பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் பெற்றுள்ளனர்.

நேற்று நடைபெற்ற கல்லூரியின் கலா நிகழ்ச்சிகளின்போது கல்லூரி அதிபர் திரு. தம்பு மாணவர்களைப் பாராட்டிப் பரிசுகளை வழங்கினர்.

### தங்கனிகாவுக்கு சுதந்திரம்

டரசலாம், மார். 31

தங்கனீக்கா இவ்வருடம் டிசம்பர் 28ம் திகதி சுதந்திரமடையவிருக்கிறது என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### காரைநகர்ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தில் பிரார்த்தனை

காரைநகர் பயிர்க்கூடல் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தில் 2-4-61 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தொடக்கம் மாலைவரையுள்ள பகற்பொழுதுமுழுவதும் நம்நாட்டுத் துன்பம் துடைக்க வேண்டி ஸ்ரீ முருகப்பெருமானை உண்ணாவிரதமிருந்து பக்தியாய்க் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### தோட்டத்தில் அம்மன் திருவிழா

புசல்லாவ

புசல்லாவை டெல்டா குருப்பைச் சேர்ந்த டேசன் தோட்டத்தில் ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழா உற்சவம் வெகு விமரிசையுடன் நடைபெற்றது.

திருவிழாவுக்கு வந்த டெல்டாகுருப் மனேஜர் திரு. ஏ. ஜே. டார்லிங்டனையும், தோட்டத்துரை திரு. மெக்யூவிட்டியையும் தொழிலாளர்கள் சார்பில் திரு. வெற்றிவேலு மாலையிட்டு வரவேற்றார்.

### விசேஷ பிரார்த்தனை

தெல்லிப்பழை மார்ச் 30

தமிழ்மொழிப் போராட்டம் வெற்றி பெறவேண்டுமென்பதற்காக குப்பிளான் சமாதி அம்மன் கோவிலில், அவ்வூரில் வாழும் மக்கள் கூட்டுப்பிரார்த்தனை, விசேஷ அபிஷேகம், ஆராதனை நடாத்தியும் சிவபுராணம் முதலான பக்திப் பாடல்கள் ஓதியும் வழிபட்டனர். இவ்விழாவிற் தீவுப்பகுதியிலிருந்தும், உடுவில் முதலான இடங்களிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் வந்து கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு நகரசபை கூட்டம் முடிவு

சென்னை, மார்ச் 31

சிதம்பரம் நகரசபைத் தலைவர் திரு. சுப்பையாபிள்ளை, தமிழ்நாட்டு நகரசபை மகாநாட்டின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்னையில் 3 நாள் நடைபெற்ற தமிழ்நாட்டு நகரசபைக் கூட்டம் இன்று முடிவடைந்தது.

### தமிழ்நாட்டுச் செய்திகள்

தமிழ்நாடு பிற்பட்ட இனத்தவர் மகாநாடு சென்னையில் நடைபெற்றது. பிற்பட்ட இனத்தவருக்கு அரசாங்கம் அளித்துள்ள உதவிகள் போதா என்ற கருத்தை அங்கு பேசிய தமிழ்நாடு மந்திரிமார் பலர் வெளியிட்டனர்.

ஃ ஃ ஃ

சுதந்திராகட்சியைத் தாக்காமல் இருப்பதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்துடன், சுதந்திராகட்சி கூட்டு சேர முயற்சிக்கிறது என்று தமிழ்நாடு முதன் மந்திரி திரு. காமராஜர் கோவையில் நடந்த ஒரு கூட்டத்தில் கூறினர்.

ஃ ஃ ஃ

சென்னையில் வாழும் சேரி மக்களின் பிரச்சினை தீர காங்கிரஸ் ஆட்சி மாறவேண்டும் அல்லது ஆளும் கட்சியினருக்கு நல்லறிவு ஏற்படவேண்டும் என்று சுதந்திரா கட்சித் தலைவர் சி. இராஜகோபாலாச்சாரியார், 'புஷ்பநகர்' சேரி வாழ்வோர் சங்கத்தில் பேசியபோது கூறினர்.

ஃ ஃ ஃ

குமாரி பத்மினி, குமாரி ராகினி ஆகியவர்களின் ராமாயண நாட்டிய நாடக அரங்கேற்றம் திருவல்லிக்கேணி என். கே. டி. கலாமண்டபத்தில் நடைபெற்றது. நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

ஃ ஃ ஃ

தாராபுரத்திற்கு அருகிலுள்ள கிராமம் ஒன்றில் பருத்திக்காட்டில் வேலை செய்துகொண்டிருந்த நான்கு உழவர்களை சிறுத்தைப்புலியொன்று தாக்கியது. அவர்கள் அதை எதிர்த்துப் போராடிக் கொன்றனர்.


ரசிகர்களை மகிழ்விக்க
திரும்பவும் காட்சியளிக்கிறது
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

இணைபிரியா இதயம் உள்ள சகோதரர்கள் நாங்கள். அதனால் அண்ணன் தங்கையாகிய நாங்கள் இந்த அவனிக்கே புதியவர்கள்.

ஏன் அகிலத்திற்கே புதுமையானவர்கள். நாங்கள் கண்ணியம், இலட்சியம், தன்னடக்கம், பண்பாடு போன்ற இன்னும் நல்ல வழிகளைக் கடைப்பிடித்தோம்.

........எனவே

பழசப்பழக பாலும் புளிக்கும், பருகப் பருக தேனும் திகட்டும். இனிக்கும் நிலவும் இதயத்தை மயக்கும். தென்றலும் கூட சில போது கசந்து விடுவதுஉண்டு.........

ஆனால் மலை அசைந்தாலும் நிலை அசையாது, சுகம் நாடாது, சுதந்திரம் தேடாது வாழ்க்கையில் ,போராடினேன்......

ஏன்?

எல்லாம் என் தங்கையின் நல்வாழ்விற்காக. கடைசியில் கண்டதென்ன?

பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ளமுருக்கும் வரலாற்றை வந்து பாருங்கள்......

புதுமை விரும்பிகள்



எம். ஜீ. ராமச்சந்திரன்
பி. வி. நரசிம்மபாரதி,
பி. எஸ். கோவிந்தன்

ஈ. வி. சரோஜா
மாதுரீதேவி, வி. சுசீலா

நடித்த

அசோகா பிக்சர்ஸ்
என் தங்கை

டைரக்ஷன்: CH. நாராயணமூர்த்தி & M.K.R. நம்பியார்
கதை, வசனம்: வில்லன்: T.S. நடராஜன் ஸ்டூடியோ: நியூடோன்
அசோகா பிக்சர்ஸ், 18, லஸ் அவன்யூ, மதராஸ்.4

இப்பொழுது திரையிடப்படுகிறது!
மனோகரா (யாழ்ப்பாணம்)
நீலமலைத் திருடன்
ரஞ்சன் அஞ்சலிதேவி நடித்தது.
மாலை 6-30 இரவு 9-30 சனி, ஞாயிறு 2-30 மெற்னி

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைக்காகத்தானே மழையிலும் வெயிலிலும் இரவும் பகலுமாக சத்தியாக்கிரகப் போராட்டம் நடக்கிறது.

⁂ ⁂ ⁂

"பங்குனி உத்தரம்—காவடி. விசேஷ வழிபாடு எல்லாம் நடக்கிறது. உடனே வா" என்று நல்லூர் முருகன் கருணையுடன் அழைத்தான்.

நல்லூர் முருகனை பலநாள் சென்றுபார்க்கவில்லை. அவனே இழுத்தாட் கொள்ளுவது போல இருந்தது அந்த அழைப்பு.

அழைப்பின்படி காலையில் சென்றேன். ஐந்து ஜதை மேளம், தேவார பஜனை கோஷ்டிகள், காவடி ஆட்டம் முதலிய வைபவங்களுடனே, கோவில் காவலர், முடி இறக்கி, தலை மாலை அணிந்து, பீதாம்பரம் உடுத்தி, பால் காவடி எடுத்துக்கொண்டு பக்தியுடனே மெதுவாக கோவில் நோக்கி வந்துகொண்டிருந்தார். அவரைப் பார்த்த ஓர் அன்பர், "பழநி ஆண்டவர்போலிருக்கிறதே. திருஷ்டி விழாமல் இருக்கவேண்டும்" என்ருர்.

மதுரை ஆதீனம் இங்கு யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிருரா? என்று மற்ருேர் நண்பர் அவரைப் பார்த்துவிட்டுக் கேட்டார்.

இதில் பெரிய விசேஷமென்னவென்ருல், காலையில் வெயில் சுள்ளென்று அடித்தது; காவடி ஊர்வலம் புறப்பட்டபோது, மேகங்கள் சூழ்ந்துவந்து, குடைபிடித்ததுடன், கோவிலுக்குச் செல்லும்வரை "புஷ்பமாரி" பொழிந்தது.

இதைப் பார்த்துவிட்டு ஓர் அன்பருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "தெய்வம் உள்ளது" என்பதற்கு இது பெரிய பிரத்யட்சபிரமாணம் என்று வாயாரப் பாராட்டினுர்.

## இரத்தினக் கம்பளம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுரையில் சிலபகுதிகளைப் பதுமனுர் வாசகர்களுடன்பகிர்ந்துகொள்ள விரும்புகின்ருர்.

". . . . சாவகச்சேரி எம். பி. நவரத்தினம் 60 வயதுக் கிழவனைப் போலப் பேசுவார். இதனுல் அவரை ஒரு சோம்பேறி என்று சொல்வதற்கில்லை. சண்டை ஒன்று மூண்டால் என்ன செய்ய வேண்டுமென்பதை அவர் நன்கு அறிவார்.

"1958 இல் அவரும் மற்றவர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டபோது அனைவரும் தாடி வளர்ப்பதென முடிவு செய்தனர். ஆனுல் இன்றும் தாடியுடன் திரியும் எம். பி. அவர் ஒருவரேதான்.

"விவாதத்தில் அவர் ஒரு சமர்த்தர். ஆனுல் எவருக்கும் தீங்கு விளையாதவர்.

# "இந்தோ - பாகிஸ்தான் உறவை கோபதாபம் மாற்றிவிட முடியாது"

## கலாச்சார மகாநாட்டில் பிரதமர் நேருஉரை

புதுடில்லி, மார்ச் 31

"இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே தோன்றியுள்ள பிரச்சினைகளுக்கும் சச்சரவுகளுக்கும் சரித்திரத்தின் விசித்திரப் போக்கே காரணம்" என இன்று புதுடில்லியில் ஆரம்பமான பாரத - பாகிஸ்தான் கலாச்சார மகாநாட்டில் இந்தியப் பிரதமர் நேரு கூறினுர்.

இம்மகாநாட்டிற்குப் பாகிஸ்தானிலிருந்து எழுத்தாளர்களும், ஓவியர்களும், கவிஞர்களும், கலைஞர்களுமாமர்கச் சுமார் 40 பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

திரு. நேரு தொடர்ந்து பேசுகையில் பின்வருமாறு கூறினுர்:

"இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே எவ்வளவுதான் வேற்றுமைகள் இருந்தாலும் இரண்டுக்கும் பொது ஒருமைப்பாடு இருக்கிறது. ஒரே மாதிரி கலாச்சாரம் இருக்கிறது. சரித்திரமும் நில அமைப்பும் இவ்விதம் இருக்கும் நிலையில் நமது கோபதாபங்கள் இதை மாற்றிவிட்டது.

## இந்திய வியானப்படை 28-ம் ஆண்டுவிழா

புதுடில்லி, மார்ச் 31

இந்திய விமானப்படையின் 28-வது ஆண்டுவிழா நாளை ஆரம்பமாகிறது.

## உரிமைப் போராட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடமாகாணம், கிழக்குமாகாணம் இரண்டிலும் வசிக்கும் தமிழ்ப்பேசும் மக்கள் தங்கள் அரசியல் நோக்கத்தை நன்கு எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இத் தீர்மானத்தை நேர்மையுடனும் நீதியுடனும் நடந்துகொள்ளும் எந்த அரசாங்கமும் அங்கீகரிக்காமல் இருக்கமுடியாது."

"அவர் இலங்கை மக்களை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதுகின்ருர். சக்திமிக்க சிங்களரைக் குடும்பத்தின் தந்தையாகவும் தமிழரைத் தாயாகவும் அவர் எண்ணுகின்ருர். இப்போது இந்தக் குடும்பத்தில் சண்டை கிளம்பியிருப்பதாகவும் மணமுறிவு ஏற்படாமலே குடும்பத்தில் சமாதானம் ஏற்படவேண்டுமெனவும் அவர் விரும்புகிருர்."

## மழையிலும் காற்றிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யிடையே பலத்த காற்றும் வீசியபோதிலும் கச்சேரி வாசல்களில் சத்தியாக்கிரகிகள் தங்கள் இடத்தை விட்டு நகரவில்லை. மழை பெய்த போதிலும்காற்று வீசியபோதிலும் சத்தியாக்கிரகிகள் பக்திப்பாடல்களைப் பாடிக்கொண்டேயிருந்தனர்.

திரு. வி. ஏ. கந்தையா, திரு சி. சிவசுந்தரம், திரு. வி. தர்மலிங்கம், திரு. வி. என். நவரத்தினம் ஆகிய எம். பி. க்களும் மழையில் நனைந்தபடியே மேலங்கிகளைக் கழற்றிவிட்டு சத்தியாக்கிரக்ம் செய்தனர்.

நேற்று நண்பகலில் நல்லூர் வட்டாரத் தொகுதி மக்கள் சத்தியாக்கிரகிகளுக்கு உணவளித்தனர். நல்லூர் வட்டாரத்தின் மாநகரசபை அங்கத்தவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் இதற்கு ஒழுங்குசெய்திருந்தார். சத்தியாக்கிரகிகளுக்கு உணவு வழங்கிய நல்லூர் வட்டார மக்களும் சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டனர்.

நேற்று மாலை தொடக்கம் இன்று மாலைவரை நல்லூர்த் தொகுதியைச் சேர்ந்த தொண்டர்கள் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமையில் மறியல் செய்கிருர்கள்.

சென்ற இரண்டு தினங்களாகப் பழைய பூங்கா வாசலின் உட்பக்கத்திலிருந்து சிங்களப் பாடல்களை உச்சஸ்தாயியில் அலறிக்கொண்டிருந்த வானொலிப் பெட்டி நேற்று அங்கிருந்து அகற்றப்பட்டுவிட்டது.

நேற்று அரசாங்க விடுமுறையாதலால் கச்சேரி தவிர்ந்த இதர அரசாங்க காரியாலயங்களின் முன் நடைபெறும் மறியல் ஒன்றிரண்டு காரியாலயங்கள் முன் நடைபெறவில்லை.

இன்று சனிக்கிழமை பிற்பகல் திரு. சிவசுந்தரம் எம். பி. தலைமையில் கிளிநொச்சியிலிருந்து சைக்கிள் ஊர்வலமொன்று யாழ்ப்பாணம் கச்சேரிமுன் வந்துசேரவிருக்கின்றது. நேற்று யாழ்ப்பாணத்தில் நின்று மறியலில் கலந்துகொண்ட திரு. சிவசுந்தரம் நேற்று மாலை கிளிநொச்சிக்குத் திரும்பினுர்.

தமிழ்நாட்டில் வார்ப்பட இரும்புக் குழாய்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அமைக்க ஐந்து ஸ்தாபனங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது.

# மட்டக்களப்பில் 3000 தொண்டர்கள் மறியல்

வாழைச்சேனை, வெள்ளி

இன்று மழையும், வெயிலும் மட்டக்களப்பில் மறியல் இயக்கத்துக்கு இடையூறு விளைவிக்க முயற்சிசெய்த போதிலும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட தொண்டர்கள் அதற்குச் சிறிதும் இடம் கொடுக்கவில்லை.

கதிரவெளியிலிருந்து செங்கலடிவரையுள்ள பல்வேறு கிராமங்களையும் சேர்ந்த ஆண்களும் பெண்களும் இளைஞர்களும் சிறுவர்களும் இன்று கல்குடாத் தொகுதி எம். பி. திரு. பொ. மாணிக்கவாசகர் தலைமையில் மட்டக்களப்புக் கச்சேரி வாசல்களில் சத்தியாக்கிரகம் செய்தனர்.

தலையில் இளநீரும் கையில் எலுமிச்சம்பழமும் ஏந்தி மறியல்களம் சென்ற இவர்கள் கடும்மழையில் நனைந்தபடி சத்தியாக்கிரகம் செய்தனர். நண்பகலுடன் மழை ஓய்ந்ததும் பின்னர் எறித்த வெயிலில் அவர்கள் தங்கள் ஈரத்தை உலர்த்தினர். சத்தியாக்கிரகம் செய்துகொண்டிருந்த சமயம் விஷப்பாம்பினுல் தீண்டப்பட்ட மயில்வாகனம் என்னும் தொண்டர் பூரண குணமடையாமலிருந்தும் இன்று மறியல் இயக்கத்தில் கலந்து கொண்டார்.

வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலையைச் சேர்ந்த ஊழியர்கள் திரு. பத்மநாதன் தலைமையில் ஊர்வலமாகச் சென்று மறியலில் கலந்து கொண்டனர். மாங்கேணி, களுவன்கேணி ஆகிய இடங்களிலிருந்து 500 சைக்கிள்களில் இளைஞர் ஊர்வலமாகவந்து சேர்ந்தனர். மீன்பிடித் தொழிலாளர்களின் ஊர்வலமும் மற்றும்பல ஊர்வலங்களும் இன்று கச்சேரியடியை வந்தடைந்தன.

பக்திப்பாடல்கள ஊர்வலங்களில் பாடப்பெற்றன. சத்தியாக்கிரகிகள் மத்தியில் கல்குடா எம். பி. திரு. பொ. மாணிக்கவாசகர் பேசுகையில் சத்தியாக்கிரக இயக்கம் பலவீனமடைந்து வருகிறதென்று கூறும் அரசாங்கத்துக்கு இன்றைய மறியல் இயக்கம் சரியான பதிலென்று கூறினுர். பட்டினி போட்டோ, இராணுவத்தாலோ தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைப் போராட்டத்தை அடக்கிவிட முடியாதென்பதை அரசாங்கம் உணரும்நாள் வெகுதூரத்திலில்லை என்று திரு. மாணிக்கவாசகர் கூறினுர்.

## ஆசிரியர்கள் ஐரோப்பா செல்கிருர்கள்

கொழும்பு, வெள்ளி

இலங்கை ஆசிரியர் பிரயாண சங்கத்தைச் சேர்ந்த 16 அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கோஷ்டி, ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் சுற்றுப் பிரயாணம் செய்யும் பொருட்டு, ஏப்ரல் 11-ம் தேதி லண்டன் வந்து சேரும். பிரிட்டனில் பல கல்வி நிலையங்களுக்கும் இக்கோஷ்டி விஜயம் செய்யும்.

## இன்று சுதேசிவாரம்

கொழும்பு, சனி

இன்று நாடுமுழுவதும் சுதேசிவாரம் கொண்டாடப்படும். நாடுமுழுவதும் பிரசாரக்கூட்டங்களும் கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இலங்கை வானொலி சிங்கள ஒலிபரப்பு இதுபற்றி விசேஷ நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும்.

## பீலிக்ஸுக்கு குருஷேவ் பேட்டி

மாஸ்கோ, மார்ச் 31

சோவியத் பிரதமர் திரு. குருஷேவ், இலங்கை நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கு இன்று கிரம்ளினில் பேட்டியளித்தார்.

## சென்னைபல்கலைக்கழகத்தில் 86 இலங்கை மாணவர்

சென்னை, மார்ச் 31

சென்னை பல்கலைக்கழகத்தில் 86 இலங்கை மாணவர்களும், 190 மலாயா மாணவர்களும் கல்விகற்பதாய் பல்கலைக்கழக ஆண்டறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. 53 இந்திய மாணவர்களுக்கு ஒரு வெளிநாட்டு மாணவர் வீதம் இங்கு கல்வி பயில்வதாயும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

லண்டன் மார்ச் 31

மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மிலன், இன்று ஜமாய்க்கா வந்து சேர்ந்தார்.

## அரசாங்க அதிபருடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்க அதிபர்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு ராணுவத்தினர் உதவிபுரிவார்கள் எனத் தெரிவித்தாராம்.

மந்திரிசபை அங்கத்தினர்களைக் கொழும்பிலேயே தங்கியிருக்கும்படி பிரதமர் கேட்டுக்கொண்டதாயும், தினமும் மந்திரிசபையைக் கூட்டி வடக்கு, கிழக்கு மாகாண நிலைமையை ஆராயும் பொருட்டே பிரதமர் இவ்வாறு கேட்டுள்ளாரென்றும் தெரிகிறது.

இன்னும், மந்திரி சபையின் விசேஷ கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்க அதிபர்கள் நேற்றுப் போல் இன்றையக் கூட்டத்திலும் கலந்து கொள்வார்கள்.

திங்கட்கிழமை இரவு அரசாங்கம் இவ்விஷயத்தில் ஒரு முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்படலாமென அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலக்காவுடன் பிரதமர் இன்று சத்தியாக்கிரக நிலைபற்றி ஆலோசிக்கவிருக்கிருர் என்றும், இந்த ஆலோசனையில் திரு. ஸி. பி. டி. சில்வாவும் கலந்து கொள்வாரென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் அரசாங்க அதிபர்களுடன் பேசிய சில மணிநேரத்தில் நியமன அங்கத்தினர் திரு. எஸ். தொண்டமான் "டெம்பிள்டிரீஸ்" மாளிகையில் பிரதமரைச் சந்தித்துப் பேசினுர்.

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வசதியாய் இருக்கும் பொருட்டு ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் வரை சத்தியாக்கிரகத்தை ஒத்திவைக்கும்படி சில தமிழ்ப்பிரமுகர்கள், தமிழரசுக் கட்சித்தலைவர்களைக்கேட்டிருக்கிருர்கள் என்று தெரிகிறது. பேச்சுவார்த்தையில் திருப்தி ஏற்படாவிட்டால் மீண்டும் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கலாமென அவர்கள் ஆலோசனை கூறியிருக்கிருர்களாம்.

அற்புதம்! அழகிய பெனியன்!! கால்மேஸ் !!!

"லேடன்"

Leyden L.I.L

தயாரிப்பு

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்

இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனுட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் விஞ்சியது "லேடன்" பெனியன் கால்மேஸ் என்பதுதான் அந்த அற்புதம்

தொழிற்சாலை

Advt 80 7, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலே வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.